நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**உணவு ஏற்றுமதியும் உலக நிலவரமும்**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 03 Mar 2011 12:00:00 AM IST
Last Updated : 03 Mar 2011 05:10:06 AM IST

அண்மையில் மதிப்புக்குரிய நமது விளையாட்டுத்துறை, விவசாய அமைச்சர் சரத்பவார், 2010-11-ம் ஆண்டுக்கான கரீஃப் உணவு உற்பத்தி முன் மதிப்பீட்டை வெளியிட்டு, உணவு உற்பத்தி உபரி மிகுதியாக உள்ளதென்றும், கையிருப்புகளும் கணிசமாயுள்ளதால் கோதுமை, அரிசி, சர்க்கரை ஏற்றுமதி செய்வது பற்றி பரிசீலிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் எல்லா உணவுதானிய விலைகளும் உச்சத்தில் உள்ளதால், ஏற்றுமதியால் இந்தியாவுக்கு லாபம் உண்டு. தனிப்பட்ட முறையில் ஏற்றுமதி டீல் மூலம் அமைச்சருக்கும் லாபம் இருக்கலாம்.

நமது தேவை, உள்ளூர் விலைவாசி ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு கவனித்தால் நமது அபரிமித உபரி உற்பத்தி என்பது அற்ப சந்தோஷமே.

கரீஃப் முன்மதிப்பீடு கடந்த ஆண்டோடு ஒப்பிடப்பட்டு உற்பத்தி உயர்வு பேசுவது கெட்டிக்காரத்தனம். ""கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்'' - ஆனால் இது மூன்றாவது, நாலாவது முன்மதிப்பீடு வெளியாகும் 4, 5 மாதங்கள் கழித்துத் தெரியவரும். 2008-09 சாதாரணமாக நல்ல உற்பத்தி ஆண்டு. 2009-10 அதாவது கடந்த ஆண்டு வறட்சி ஆண்டு. 2010-11 மீண்டும் நல்ல உற்பத்தி ஆண்டு. அந்த அளவில் பருவம் ஒத்துழைத்துள்ளது உண்மையே. அப்படி இருப்பினும்கூட 2008-09 ஆண்டோடு ஒப்பிட்டால் 2010-11 உற்பத்தி சற்றுக்குறைவுதான்.

கோதுமை ரஃபி பயிர் என்பதால் கரீஃப் முன்மதிப்பீட்டில் வராது. அரிசி, புஞ்சைத்தானியங்கள், பருப்பு அடங்கிய கரீஃப் உணவு உற்பத்தி 2008-09-ல் 11.81 கோடி டன்கள்.

2009-10-ல் அதாவது கடந்த ஆண்டு இவை 10.38 கோடி டன்கள். நடப்பு கரீஃப் பருவ உற்பத்தி 2010-11-ல் 11.71 கோடி டன்கள். உண்மையில் 2008-09 ஆண்டைவிட 10 லட்சம் டன்கள் குறைவுதான்.

மோசமான ஒரு வறட்சி ஆண்டுடன் மழை ஆண்டை ஒப்பிடுவது அமைச்சரின் கெட்டிக்காரத்தனமே தவிர, உண்மையில் நடப்பு ஆண்டு நிலையை 2008-09-ம் ஆண்டுடன் ஒப்பிட்டு ஏற்றுமதி பற்றி முடிவு செய்ய வேண்டும்.

நெல், வெப்பம் குளிர் இரண்டையும் தாங்கும். கோதுமை, வெப்பம் தாங்காது. அது குளிர்காலப் பயிர். எனினும் அமைச்சர், ரஃபி முன்மதிப்பீட்டின்படி 2010-11-ல் கோதுமை உற்பத்தி 8.50

கோடி டன் என்பதாகவும், 2009-10-ஐவிட 25 லட்சம் டன் அதிகம் என்றாலும், உண்மையில் 2008-09 ஐவிட கோதுமை உற்பத்தி நடப்புப் பருவத்தில் குறைவுதான்.

கோதுமை விளையும் மாநிலங்களில் பிப்ரவரி மாதம் அதிக வெப்பம் என்பதால் கோதுமை உற்பத்தியில் எதிர்பார்த்த மிகுதி உற்பத்தி இருக்காது என்றும் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. இங்குதான் மிகவும் முக்கியமான கேள்வி எழுகிறது.

ஏற்றுமதி செய்யும் அளவில் இந்திய உணவு உற்பத்தி தலைநிமிர்ந்துவிட்டது என்றால் உணவு விலைகள் வீழ்ச்சியுற வேண்டும். உயர்ந்துவிட்ட உணவு விலைகள் அப்படியேதான் உள்ளன. காய்கறிகளின் விலைகளில் மட்டுமே சற்று இறக்கம் காணப்படுகிறது.

ஐ.நா.வின் உணவு - விவசாய நிறுவனமான எஃப்.ஏ.ஓ. 2011 ஜனவரி மாதத்தில் உலக உணவு விலை, வரலாறு காணாத உச்சநிலையை எட்டியுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளது. எஃப்.ஏ.ஓ. கணித்துள்ள உணவு விலைக் குறியீட்டெண் 231-ஐத் தொட்டுவிட்டது.

கடந்த 20 ஆண்டுகளில் உணவின் விலை இந்த அளவுக்கு உயர்ந்ததாக வரலாறு இல்லை, ஏன்? பதுக்கல், கள்ளச்சந்தை என்பதெல்லாம் காரணங்கள் அல்ல.

நிஜமான காரணம் தடுமாறிப்போன தட்பவெப்பத்தால் ஓரளவுக்கு இந்தியா நீங்கலாக, உலக நாடுகளில் உணவு உற்பத்தி குறைந்துவிட்டது. மாறி மாறி ஒருபக்கம் வெள்ளத்தால் சேதம். ஒருபக்கம் அதிகமான பனிப்பொழிவால் சேதம். ஒருபக்கம் வறட்சியால் சேதம்.

கோதுமை விளையும் முக்கிய நாடான கனடாவை எடுத்துக்கொண்டால், தாங்க முடியாத குளிர், பனிப்பொழிவால் - கடந்த ஆகஸ்டு, செப்டம்பரில் கோதுமைப் பயிர் அழிந்ததுபோல் ரஷியாவில் வரலாறு காணாத வெப்பம்.

100 டிகிரி பாரன்ஹீட் என்பது ரஷியர்களுக்கு கேள்விப்படாத சீதோஷ்ணம். ரஷியாவில் வெப்பம் மிகுந்து கோதுமை உற்பத்தி குறைந்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் வரலாறு காணாத வெள்ளம், கோதுமைப் பயிரை அழித்துள்ளது. சீனாவில் இப்போது குளிர்காலப் பருவம் கோடைபோல் உஷ்ணம் மிகுந்து ரஃபி கோதுமை உற்பத்திக்கு உலை வைத்துவிட்டது.

இந்தியாவில் மழை, பருவம்தவறிப் பெய்த காரணத்தால் பல மாநிலங்களில் பயிர்ச்சேதமும் விவசாயிகளின் தற்கொலைகளும் அதிகமாயுள்ளன.

எனினும் கூட, இரண்டாவது மொத்தப் பயிர் உற்பத்தி முன்மதிப்பீட்டை வைத்து உணவு உற்பத்தி உயர்ந்துள்ளதாக முன்கூட்டியே தீர்மானிப்பது சரியல்ல. அப்படியே இருந்தாலும்கூட, நமது புதிய உணவு விநியோகத் திட்டம் அடிப்படையில் ஒரு குடும்பத்துக்கு மாதம் 35 கிலோ என்று பசிக்குப் பாதுகாப்பு அதாவது "ஃபுட் செக்யூரிட்டி' தர உணவு வழங்கல் உயர்த்தப்பட்டுள்ளதால் ஒரு மாதத்துக்கு ரேஷன் உணவுத் தேவை 60 லட்சம் டன்கள் என்று புதிய கணக்கு கூறுகிறது. ஆகவே, நமக்கு ஆண்டுக்கு 7.2 கோடி டன்கள் இருப்பு வேண்டும்.

இப்போதுள்ள உணவு இருப்பு 4.7 கோடி டன்களே. நமது தேவைக்குமேல் இருந்தால்தானே ஏற்றுமதி சாத்தியம்? போகிற போக்கைப் பார்த்தால் மத்தியில் காங்கிரஸ் கூட்டணி நீடிக்குமா என்ற கேள்வியும் எழுகிறது. சரத் பவார் மீண்டும் அமைச்சராவதும் ஐயமே.

இருக்கும் உணவை இப்போதே நல்ல விலைக்கு விற்று விடலாம் என்று திட்டமோ?

அடுத்த ஆண்டு அடுத்த ஆட்சி வந்தால் உணவுச் சுமையை புதிய அரசு ஏற்று, அதைவிட நல்ல விலைக்கு உணவை இறக்குமதி செய்து புதிய அரசை நஷ்டமடையச் செய்யும் நல்லெண்ணம் இருப்பின் இப்போது உணவை ஏற்றுமதி செய்யலாம்.

2010-11-ம் ஆண்டு நல்ல உணவு உற்பத்தி ஆண்டுதான் என்பதுவே ஒரு கேள்விக்குறியாக உள்ளபோது ஏற்றுமதியில் ஈடுபட்டால் நமது கதி அதோகதியாகிவிடுமே.

விலைவாசி சற்றேனும் அசைந்து கொடுக்கவில்லை. விண்ணைத் தொடும் விலைவாசிகளைப் பற்றி டாலர்களில் புழங்கும் இந்திய அமைச்சர்களுக்கும் கவலை இருக்காது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் அவ்வாறே மாதம் ஒரு லட்ச ரூபாய் சம்பளம் வாங்கும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், பெரிய பெரிய பணமுதலைகள், மேல்நிலை நிர்வாக அலுவலர்களுக்கும் விலைவாசி ஒரு பொருட்டல்ல.

ஒரு கிலோ அரிசி ரூ. 100 என்று விற்றால்கூட மேற்படி மேல்மட்ட வர்க்கத்தால் வாங்கிச் சாப்பிட முடியும். ஆனால், மாதம் ரூ. 2,000 சம்பளம் வாங்கிக் குடும்பம் நடத்தும் பல கோடி, ஏழை மக்கள் நிரம்பிய இந்தியாவுக்கு மேலும் மேலும் உணவு விலை ஏறினால் தாங்க முடியுமா? ஏறிய விலைகள் எல்லாம் இறங்காதபோது ஏற்றுமதி என்று பேசுவதற்கு அமைச்சர்களுக்கு ஏன் வாய் கூசவில்லை?

**மாமரத்தில் பூவை பராமரித்தால் மகசூல் அதிகரிக்கும்**

First Published : 03 Mar 2011 02:07:48 AM IST

புதுச்சேரி: மாமரம் பூத்துக் குலுங்க தொடங்கி உள்ளது. பூவில் மகரந்தச் சேர்க்கை நடந்த பின்னர் பிஞ்சு விட்டு. அது காயாகப் பெரிதாகி தொங்கும். பழமாகப் பழுக்கும் வரை பொறுமை இல்லாதவர்கள் காயாகவே பறித்து ரசாயன கலவையைப் போட்டு அதைப் பழுக்க வைத்து மார்க்கெட்டுக்கு அனுப்பி விற்பனை செய்கின்றனர்.

÷ருசியின் காரணமாக "மா' பழங்களின் அரசி என்று அழைக்கப்படுகிறது. மாவில் பல்வேறு வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகை பழமும் தனி ருசி உடையவை. இப்போது மா மரம் பூக்கத் தொடங்கி உள்ளது. சித்திரையில் பழம் கிடைக்கும். இப்போது மாம்பூவைச் சரியாகப் பராமரித்தால் மகசூல் அதிகரிக்கும்.

÷அதற்கான தொழில்நுட்பங்களை புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் வல்லுநர் என். விஜயகுமார் கூறியது:

÷பூ பூக்கும் நேரத்தில் பூ பிணைக்கும் புழு தாக்குதல் காணப்படும். இந்தப் புழு பூ அருகே வலை போன்று உருவாக்கி பூவைச் சாப்பிடும். இதனால் மகரந்தச் சேர்க்கை நடக்காது. மகசூல் பாதிக்கும்.

÷எல்லாப் பூக்களும் உதிராமல் பாதுகாக்க வேண்டும். மகரந்தச் சேர்க்கை நடக்க வேண்டும். அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் மகசூல் அதிகரிக்கும்.

÷பூ பிணைக்கும் புழுவைக் கட்டுப்படுத்த கியூரா கிரான் பூச்சி மருந்தை 1 லிட்டர் நீரில் 2 மி.லி. என்ற அளவில் கலந்து பூ மீது தெளிக்க வேண்டும். தெளிக்கும்போது மெதுவாகச் செய்ய வேண்டும்.

÷வேகமாக தெளிப்பானைப் பயன்படுத்தினால் பூ உதிர்ந்துவிடும். 3 வயது வரை உள்ள ஒரு மரத்துக்கு 5 லிட்டர் அளவு தேவைப்படும். 3 முதல் 15 வயது வரை உள்ள மரத்துக்கு 10 லிட்டர் தேவைப்படும். அதற்கு மேல் உள்ள மரத்துக்கு 25 லிட்டர் தேவைப்படும்.

÷பூ கருகுவதைக் கட்டுப்படுத்த என்டோ சல்பான் 35 இசி என்ற மருந்தை 1 லிட்டர் நீரில் 2 மி.லி. என்ற அளவிலும் அதனுடன் கார்பன்டைசைம் என்ற பூஞ்சான மருந்தை 2 கிராம் வீதம் 1 லிட்டர் நீரில் கலந்து பூ மீது தெளிக்க வேண்டும். மா பூத்திருந்தால் நாப்தலின் அசிட்டிக் அமிலம் 20 பிபிஎம் என்ற அளவில் தெளிப்பதால் பூ உதிராமல் தடுக்கப்படும்.

÷அதனால் ஒவ்வொரு பூவிலிருந்தும் மா பிஞ்சு உருவாகும். மா மரத்தில் தண்டுப் பகுதி, கிளைப் பகுதியை தத்துப்பூச்சி சாறு உறிஞ்சும். இதுவும் மகசூல் பாதிக்கக் காரணமாக இருக்கும். இதைக் கட்டுப்படுத்த அசிபேட் 75 எஸ்பி என்ற கரையும் பவுடரை 1 கிராம் அளவுக்கு எடுத்து 1 லிட்டர் நீரில் கலந்து கொள்ள வேண்டும்.

÷அத்துடன் கார்பரைல் பூச்சி மருந்து 50 டபிள்யூபி என்ற பவுடரை 2 கிராம் அளவுடன் 1 லிட்டர் நீர் வீதம் கலக்க வேண்டும். இந்த இரண்டு கலவையும் ஒன்றாகக் கலந்து பூ, தண்டு, கிளைகளில் தெளிக்க வேண்டும்.

இதனால் தத்துப்பூச்சி தாக்குதல் குறையும். ÷இரண்டு நாள் இடைவெளியில் நனையும் கந்தகம் 1 லிட்டர் நீரில் 2 கிராம் அளவில் கலந்து தெளிக்க வேண்டும். இதனால் தத்துப்பூச்சி தாக்குதல் மேலும் குறையும். ÷பொட்டாஷியம் நைட்ரேட் ரசாயன கலவையை 1 லிட்டர் நீரில் 10 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். ÷இதனால் பூ பூக்காத மரங்கள் பூ எடுக்கும். பூ சிறியதாக இருந்தால் அதைப் பெரிதாக்க பொட்டாஷியம் நைட்ரேட் ரசாயன கலவையை 1 லிட்டர் நீரில் 20 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும் என்றார்.

**சிறுதானியங்கள் உற்பத்தி:சிறப்பான வருமானம்**

First Published : 03 Mar 2011 02:03:03 AM IST

விழுப்புரம்: பசுமைப் புரட்சியால் உற்பத்தியைப் பெருக்கினாலும், பாரம்பரிய விவசாயத்தைக் கைவிட்டதால், சிறுதானியங்களின் உற்பத்தி குறைந்துள்ளது. இவற்றை முறையாக உற்பத்தி செய்தால் சிறப்பான வருமானம் ஈட்டலாம்.

சோளம், கம்பு, கேழ்வரகு, திணை, சாமை, குதிரைவாலி ஆகிய சிறுதானியங்கள் ஊட்டச்சத்து மிக்க தானியங்களாக நிரூபிக்கப்பட்டாலும், பசுமைப் புரட்சிக்குப் பின் மக்கள் மனதிலிருந்து அகற்றி விட்டோம்.

இந்தத் தலைமுறைக் குழந்தைகளிடம் தானியங்கள் பற்றிக் கேட்டால் அரிசி, கோதுமை தவிர மற்ற தானியங்களைப் பற்றி தெரிவதில்லை என்பதைவிட நாம் அவற்றை அவர்களுக்குக் காண்பிக்கவில்லை என்பதே உண்மை. ÷மேலும் நாகரிகத்தின் சின்னமாக அவை

அடையாளப்படுத்தப்படுவதில்லை. மாறாக அவற்றை உபயோகிப்பவர்களை தாழ்வாக எண்ணக்கூடிய மனநிலையில் மக்கள் இருக்கிறார்கள். விளைவு பல்வேறு நோய்களில் சிக்கி நிறைய செலவு செய்கிறோம்.

தற்போது மக்களை நோய்கள் அதிகம் தாக்குவதால் குறிப்பாக நீரிழிவு நோய் கண்டவர்கள் கேழ்வரகை (ராகி) அதிகம் நாடுகிறார்கள். உணவுப் பொருள்கள் தயாரிப்பு நிறுவனங்களும் கேழ்வரகு மாவை பாக்கெட்டுகளில் விற்பனைக்கு கொண்டு வந்துவிட்டன.

பெரும்பாலான சிறு நகரங்களில் கேழ்வரகு கூழ் விற்பனைக்கு வந்துவிட்டது.

நவநாகரீக உடையில் வருபவர்கள்கூட அதை வாங்கிக் குடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ÷கோடைக்காலத்தில் குளிர்ச்சி என்றாலும், உடல்நலத்துக்கு முக்கிய பாதுகாப்பாகவும் விளங்குவதால் அதை பெரும்பாலானோர் விரும்புகின்றனர்.

பொதுவாக தாய்பால் குழந்தைகளுக்குக் கிடைக்காமல் போகும்போது கேழ்வரகு கூழ் பரிந்துரை செய்யப்படுவதும், 40 வயதுக்குப் பின் உடல் சீர்கெடும் போது மருத்துவர்கள் பரிந்துரை செய்வதும் இந்த சிறுதானியங்களைத்தான். இன்றைய விவசாய தற்கொலைகளுக்கு அடிப்படை சிறுதானியங்கள் உற்பத்தியை தவிர்த்து வணிகப் பயிர்களுக்கு மாறி, சந்தைப்படுத்துவதில் சிக்கல், அதிக நீர்த்தேவை, விலைமிக்க ரசாயன இடுபொருள்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் போன்றவைகளுக்கு செலவு செய்ய முடியாமல் போனதுதான் காரணம் என்றால் அது மிகையில்லை.

சிறப்பு அம்சங்கள்: இவை சத்துமிக்க தானியங்கள் மட்டுமின்றி மிகக் குறைந்த நீரே போதுமானது. மழைநீரே போதும், நீர் பாசனம் தேவையில்லை. வளமிக்க மண் தேவையில்லை.

ரசாயன உரம் உபயோகிக்கத் தேவையில்லை. பூச்சித் தாக்குதல் குறைவு. பல தானிய விதைப்பால் சுற்றுச்சூழல் வளமையாக்கப்படுகிறது என்பது உள்ளிட்ட பல்வேறு உபயோகங்கள் இதில் உள்ளன.

எனவே கோடைக்காலத்தில் நீர் தேவையைக் கருத்தில் கொண்டும், மண்வளம் இல்லாத விவசாயிகள்கூட இந்தப் பயிர்களை உற்பத்தி செய்து தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்பதே இயற்கை வேளாண்மை ஆர்வலர்களின் கருத்து.

**மானாவாரிக்கு ஏற்ற மக்காச் சோளம் சாகுபடி**

First Published : 03 Mar 2011 02:01:52 AM IST

நமது நிருபர்

கடலூர்: தமிழகத்தில் 40 ஆண்டுகளுக்கு முன்புவரை முத்துச்சோளம், சாமை, தினை, கேழ்வரகு, வரகு உள்ளிட்ட நவதானியங்கள்தான் பெரும்பாலும் நமது உணவுப் பொருளாக பயன்படுத்தப்பட்டு வந்தன.

மானாவாரிப் பயிர்களான நவதானியங்கள் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக உணவுப் பழக்கவழக்கத்தில் இருந்தும், விவசாயத்தில் இருந்து குறையத் தொடங்கி விட்டன. பின்னர் அந்த இடத்தை அரிசி பிடித்துக் கொண்டது. இதனால் நவதானியங்கள் உற்பத்தி வெகுவாகக் குறைந்து விட்டது. கடந்த சில ஆண்டுகளாக மானாவாரி நவதானியங்கள் உற்பத்திக்கான தளத்தை மக்காச் சோளம் பிடிக்கத் தொடங்கியுள்ளது.

தற்போது தமிழகத்தில் மக்காச் சோளத்தின் ஆண்டுத் தேவை 8 லட்சம் டன். கோழிப் பண்ணைகளில் தீவனமாக மக்காச் சோளம் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் தமிழகத்தில் மக்காச் சோளத்தின் தேவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

÷ஆனால் தமிழகத்தில் ஆண்டுக்கு 4 லட்சம் டன் மக்காச் சோளம் மட்டுமே தற்போது உற்பத்தி செய்யப்படுகிறது. 1990-91 ம் ஆண்டில் தமிழகத்தில் 5.49 டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் 2005-06-ம் ஆண்டில் 2.31 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டருந்தது.

வரும் ஏப்ரல் மாதம் தொடங்க இருக்கும் இறவைப் பாசனத்தில் 4 லட்சம் ஏக்கரில் மக்காச் சோளம் பயிரிட வாய்ப்பு இருப்பதாக வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் மக்காச் சோளத்தில் சித்ரா, சி.டெக், எம்.கோல்டு 900, என்.கே. 6240, ஹைசெல் உள்ளிட்ட ரகங்கள் பயிரிடப்படுகின்றன. ஏக்கருக்கு 7 கிலோ விதை பயன்படுத்தப்படுகிறது. செலவு ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் முதல் ரூ. 5 ஆயிரம் வரைதான். ஏக்கருக்கு 30 முதல் 35 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷தற்போதைய விலை குவிண்டாலுக்கு ரூ. 1,000 ஆக உள்ளது. மக்காச் சோளத்தின் விலை சில நேரங்களில் குவிண்டால் ரூ. 1,700 வரை உயர்ந்தும் இருக்கிறது. வரும் மாதங்களில் குவிண்டால் ரூ.1,200 வரை இருக்கும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. ÷ஏற்கெனவே அறுவடை செய்த மக்காச் சோளத்தை உலர்த்தி தூற்றி பாதுகாப்புடன் சேமித்து வைத்து இருப்பவர்களுக்கும், ஏப்ரல்-மே மாதங்களில் அறுவடை ஆகும் இறவைப் பருவ மக்காச் சோளத்துக்கும் நல்ல விலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வேளாண் விற்பனைத் துறை தெரிவிக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் மங்களூர், நல்லூர் வட்டாரங்களில் மக்காச் சோளம் 2 ஆண்டுகளுக்கு முன், சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு 30 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. அதிகபட்சம் 5 மாதங்களில் மக்காச் சோளம் அறுவடைக்கு வந்துவிடும். மானாவாரிப் பயிராக இருப்பதால் செலவு மிகவும் குறைவு. பூச்சித் தாக்குதலும் இல்லை என்கிறார்கள். ÷சாதாரண காலங்களில் குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ரூ. 850 வரை விலை கிடைக்கிறது. இந்த அடிப்படையில் கணக்கிட்டால் ஏக்கருக்குச் செலவு போக குறைந்த வருவாய் ரூ.15 ஆயிரமாகவும், அதிகபட்ச வருவாய் ரூ.30 ஆயிரமாகவும் இருக்கும் என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

மக்காச் சோளம் விதை பெரும்பாலும் நிறுவனங்களில் இருந்து விற்பனை செய்யப்படுவதால், விதை விலை அதிகமாக இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். மேலும் பல விவசாயிகள் மக்காச் சோளத்தை வயலுக்கு வரும் வியாபாரிகளிடமே விற்பனை செய்கிறார்கள்.

இதனால்தான் விலை குறைவாக இருக்கிறது. விதைகளை விநியோகிக்கும் நிறுவனங்களிடம் நேரடியாக விற்பனை செய்தால் நல்ல விலை கிடைக்கும் என்கிறார்கள்.

மானாவாரிக்கு சிறந்த பயிராகவும், வணிகப் பயிராக மாறிவருவது மட்டுமன்றி, விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் பயிராகவும் மக்காச் சோளம் உள்ளது.

**விவசாயிகளுக்கு மூங்கில் சாகுபடி கருத்தரங்கம்**

First Published : 02 Mar 2011 11:57:47 AM IST

பெரம்பலூர், மார்ச் 1: பெரம்பலூர் அருகேயுள்ள கவுல்பாளையத்தில் தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில், மூங்கில் சாகுபடி குறித்த கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கில் விவசாயிகளுக்கு மூங்கில் கன்றுகளை வழங்கி மாவட்ட ஆட்சியர் மா. விஜயகுமார் பேசியது:

விவசாயிகள் தங்கள் உழைப்புக்கேற்ற லாபத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை உள்ளிட்ட துறைகள் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு சிறந்த வருமானத்தை பெற்றுத் தருவதில் மூங்கில் பயிர் முக்கியப் பங்கு வகிக்கிறது.

தற்போது, தோட்டக்கலைத் துறையின் மூலம், முள்ளில்லா மூங்கில் சாகுபடி செய்ய மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதை விவசாயிகள் அனைவரும் பயன்படுத்திக் கொண்டு, அதிக லாபம் பெற்று தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் விஜயகுமார்.

இந்தக் கருத்தரங்கில் வேளாண்மை இணை இயக்குநர் சி. சிவகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜராஜசோழன், மாவட்ட வன அலுவலர் (பொறுப்பு) ச. குருசாமி, வன விரிவாக்க அலுவலர் சொர்ணப்பா, பருத்தி ஆராய்ச்சி மைய தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் எம். மோகனலட்சுமி, முன்னோடி மூங்கில் சாகுபடியாளர் கோ. பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, தோட்டக்கலை துணை இயக்குநர் வே. செப்ந்தர்ராஜன் வரவேற்றார். உதவி இயக்குநர் அ. தாகூர் நன்றி கூறினார்.

**ரூ.4.7 லட்சம் வேளாண் கருவிகள் வழங்கல்**

First Published : 02 Mar 2011 11:18:53 AM IST

கிருஷ்ணகிரி,மார்ச் 1: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.7 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகள் வழங்கப்பட்டதாக வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண் கருவிகள் மானியத்தில் வழங்கும் விழா கீழ்க்குப்பம் கிராமத்தில் நடைபெற்றது. வேளாண்மை

இணை இயக்குநர் கா.ராஜன் தலைமை வகித்தார். மாவட்டக் கூடுதல் ஆட்சியர் லட்சுமிப்ரியா விவசாயிகளுக்கு ரூ.4.70 லட்சம் மதிப்பிலான மானிய விலையில் நெல் கதிரடிக்கும் இயந்திரம், பவர் டில்லர், கோனோவீட்டர்கள், விசைத் தெளிப்பான்கள், கைத்தெளிப்பானகள், நெல் நேரடி விதைப்புக் கருவிகள் ஆகியவற்றை வழங்கினார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாச்சியப்பன், பொறியியல் துறை செயற்பொறியாளர் அருள்மொழி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மகேந்திரன், ராமலிங்கம், வேளாண் அலுவலர் சி.முருகன், விவசாய சங்கத் தலைவர் மாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பாரூர், கீழ்க்குப்பம், என்.தட்டக்கல், பேருஹள்ளி மற்றும் துறையூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

**வனப்பகுதி ஆக்கிரமிப்பு முயற்சி: இருவருக்கு ரூ. 55 ஆயிரம் அபராதம்**

First Published : 02 Mar 2011 11:19:15 AM IST

அரூர், மார்ச் 1: அரூர் அருகே வனப்பகுதியை ஒட்டியுள்ள இடத்தில் நில ஆக்கிரமிப்பு முயற்சி செய்ததாக 2 பேருக்கு திங்கள்கிழமை ரூ. 55 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

அ.பள்ளிப்பட்டி அருகேயுள்ள கருங்கல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராமன் மகன் மாது (38). இவரது விவசாய நிலத்தினை நடூரைச் சேர்ந்த சின்னான் மகன் குமரவேல் (30) என்பவர் ஜேசிபி இயந்திரம் உதவியுடன் நிலத்தினை சமன் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது அங்குள்ள வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யும் முயற்சியில் இருவரும் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. நில ஆக்கிரமிப்பு முயற்சி குறித்து அரூர் வனச்சரகர் சி. முனிசாமிக்கு தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து நில ஆக்கிரமிப்பு முயற்சியில் ஈடுபட்ட மாது, குமரவேல் ஆகியோரிடம் வனத்துறையினர் விசாரணை நடத்தினர்.

வன நிலங்கள் ஆக்கிரமிப்பு முயற்சி செய்த குற்றத்துக்காக விவசாயி மாது, ஜேசிபி ஓட்டுநர் குமரவேல் ஆகியோருக்கு ரூ. 55 ஆயிரம் அபராதம் விதித்து மாவட்ட வன அலுவலர் கே. செல்வராஜ் உத்தரவிட்டார்.

**வேர்க்கடலை விதை கொள்முதல்:விவசாயிகளிடையே அதிருப்தி**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,03:19 IST

செய்யூர்:சீசன் இல்லாத நேரத்தில், வேளாண்மைத்துறை பல லட்சம் ரூபாய்க்கு வேர்க்கடலை (மணிலா) விதை கொள்முதல் செய்திருப்பது, விவசாயிகள் இடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.செய்யூர் தாலுகாவிற்குட் பட்ட சித்தாமூர் ஒன்றியத்தில் சித்தாமூரிலும், லத்தூர் ஒன்றியத்தில் பவுஞ்சூரிலும் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் உள்ளன.இந்த அலுவலகம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ், நெல், வேர்க்கடலை, பயறு விதைகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.விதை கிராம திட்டத்தின் கீழ், விதை உற்பத்தி, மகசூல் அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மணிலா விதை 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. காஞ்சி புரம் மாவட்டத்தில் மார்கழி, தை மாதங்களில் இறவை மணிலா, ஆடி மாதத்தில் மானாவாரி மணிலா பயிரிடுவர். மார்கழி, தை மாதங்களில் விவசாயிகளுக்கு, வேளாண்மைத்துறை மூலம் விதை வழங்கப்படுவது இல்லை. இதனால், கடந்த மாதம் தனியார் கடைகளில் ஒரு கிலோ விதை 70 முதல் 73 ரூபாய் வரை விற்கப்பட்டது.ஒரு ஏக்கருக்கு 55 கிலோ விதை தேவை. உரிக்காத வேர்க்கடலையாக இருந்தால் 40 கிலோ கொண்ட மூட்டை 1,800 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய் வரை விற்பனையானது. வேர்க்கடலையை உரித்தால் 30 கிலோ விதை கிடைக்கும். எனவே, ஒரு ஏக்கருக்கு தேவையான 55 கிலோ விதைக்கு 3,850 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரை செலவானது. சித்தாமூர் ஒன்றியத்தில் 8,750 ஏக்கரிலும், லத்தூர் ஒன்றியத்தில் 10 ஆயிரம் ஏக்கரிலும் வேர்க்கடலை பயிரிடப்படுகிறது.தை மாதத்தில் மட்டும் 90 சதவீத விவசாயிகள், மணிலா விதைப்பர். விதை தேவைப்படாத நேரத்தில், ஏப்ரல் மாதத்தில் விதைப்பதற்காக மணிலா விதையை அதிகாரிகள் கொள்முதல் செய்துள்ளனர். சித்தாமூர் ஒன்றியத்தில் 17 டன், லத்தூர் ஒன்றியத்தில் பதினைந்தரை டன் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் உள்ளது. ஒரு கிலோ விதை 48 ரூபாய்க்கு வாங்கப்பட்டு, விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ஒரு கிலோ விதை 24 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.விதை கிராம திட்டத்தின் மூலம், ஒரு விவசாயிக்கு உரிக்காத வேர்க்கடலை 40 கிலோ வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.மார்ச் மாதத்திற்குள் அரசு ஒதுக்கீடு செய்துள்ள பணத்தை செலவழிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் காரணமாக, வேளாண்மைத்துறை அதிகாரிகள் விதைகளை கொள்முதல் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.சீசன் நேரத்தில் விதைகளைக்கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்காமல், சீசன் இல்லாத நேரத்தில் அதிகாரிகள் வேர்க்கடலை விதைகளை கொள்முதல் செய்திருப்பது விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**"ராஜராஜன் 1000' நெல் வயல்கள் வேளாண் இணை இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,01:58 IST

பண்ருட்டி : பண்ருட்டியில் "ராஜராஜன் 1000' நெல் வயல்களை வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் ஆய்வு செய்தார். பண்ருட்டி வட்டாரத்தில் 2010 -11ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் நீர் வள நில வளத்திட்டத்தில் 51 விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாக இடுபொருட்கள் வழங்கி "ராஜராஜன் 1000' நெல் வயல்களை வேளாண் இணை இயக்குனர்

இளங்கோவன் சேமக்கோட்டை, நத்தம் கிராமத்தில் ஆய்வு செய்தார். மேலும், மணம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் உளுந்து விதைப்பண்ணை அமைத்து கொள்முதல் செய்ததை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் விதைச் சான்று உதவி இயக்குனர் அரிதாஸ், வேளாண்மை உதவி இயக்குனர் அமரேசன், துணை வேளாண்மை அலுவலர் ரவிசேகர், உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மஞ்சள் சாமந்தி உற்பத்தி அதிகரிப்பு: விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,02:00 IST

பண்ருட்டி : பண்ருட்டி பகுதியில் மஞ்சள் சாமந்தி பூக்கள் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. பண்ருட்டி அடுத்த அண்ணாகிராமம் வட்டாரத்தில் கத்திரி, வெண்டை, மிளகாய், காளிபிளவர், முட்டை கோஸ், எலுமிச்சை, பாகற்காய், கொய்யா உள்ளிட்ட பயிர்களும், பூக்களில் மல்லிகை ஆகியவை ஆர்வமுடன் பயிர் செய்து வந்தனர். அதுபோல் சின்னபேட்டை, ஒறையூர், ஆண்டிப்பாளையம் ஆகிய பகுதியில் 3 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாமந்தி ஆகிய பூக்களும் விவசாயிகள் பயிரிடத் துவங்கியுள்ளனர். திருவண்ணாமலை, ஒசூர், கோயமுத்தூர் பகுதியில் இருந்து மஞ்சள் சாமந்தி பண்ருட்டிக்கு வந்து கொண்டிருந்தது. தற்போது பண்ருட்டி சுற்றுப்புற கிராமங்களில் இருந்து மஞ்சள் சாமந்தி விற்பனைக்கு வருவதால் ஒரு கிலோ 15 ஆக விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதுகுறித்து சின்னபேட்டை விவசாயி மகாதேவன் கூறுகையில், "தற்போது விவசாய கூலிக்கு ஆட்கள் பற்றாக்குறை காரணமாக தோட்டப் பயிர்களை அதிகமாக பயிரிட்டு வருகிறோம். கோல்டன் மஞ்சள் சாமந்தி செடிகள் ஒசூர் பண்ணையில் இருந்து (ஏரோகோல்ட்) ரகம் ஒரு கன்று 3 ரூபாய் செலவில் வாங்கி பயிரிட்டுள்ளோம். ஒரு ஏக்கருக்கு 8,000 செடிகள் நடவேண்டும். செடிக்கு ஒரு கிலோ பூக்கள் அளவில் பூக்கும். 45 நாட்கள் வரை உற்பத்தியிருக்கும். தற்போது ஒரு கிலோ 15 அளவில் விற்பனையாகிறது' என்றார்.

**தோட்டக்கலைத்துறை விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,01:59 IST

சிறுபாக்கம் : மங்களூர் வட்டார தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. மங்களூர் வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில் கோமுகி நதிநீர் உபவடி நிலப்பகுதியாகிய நரையூர், எஸ்.நரையூர், அரசங்குடி, சிறுபாக்கம், ரெட்டாக்குறிச்சி, கொளவாய், ஜா.ஏந்தல் ஆகிய கிராமங்களில் நீர்வள, நிலவள திட்ட பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் தோட்டக்கலை வேளாண் உதவி இயக்குனர் முருகன் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் ராஜலட்சுமி வரவேற்றார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் தலைமை தாங்கி பேசியதாவது: தொழுதூர், சிறுபாக்கம் பகுதிகளில் மண்ணின் நுண்ணூட்டச்சத்து

குறைவாக இருப்பதால் மரவள்ளி, மஞ்சள், கரும்பு போன்ற பெரும்பாலான பயிர்கள் வளர்ச்சியின் போது வெளிர் மற்றும் மஞ்சள் நிறமாக மாறி மகசூல் குறைபாடு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க தெரசால் பேக் பிங்க், சிங் சல்பேட் போன்ற நுண்ணூட்ட மருந்துகளை அவசியம் இப்பயிருக்கு கொடுக்க வேண்டும். போதிய சத்து குறைபாடு உள்ள இனங்களை உடைய விவசாயிகள் இதனை தவறாமல் கடைபிடித்தால் நல்ல மகசூல் கிடைக்கும். மேலும் நடப்பு ஆண்டிற்கு மரவள்ளி 15 எக்டர், மிளகாய் ஒரு எக்டர், மஞ்சள் 6 எக்டர், கோழியஸ் 2 எக்டர் ஆகிய பயிர்களுக்கு அரசு முழு மானியம் வழங்கப்படும். ஆயக்கட்டு விவசாயிகள் இதனை பயன்படுத்தி பலனடையலாம். இவ்வாறு இளங்கோவன் பேசினார்.

**வயல்வெளி பள்ளி பயிற்சி வகுப்புகள்**

மார்ச் 03,2011,00:00 IST

திருக்கனூர் : மண்ணாடிப்பட்டில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்த வயல்வெளி பள்ளி பயிற்சி வகுப்புகள் நடந்தது. இந்திய வேளாண்மை அறிவியல் கழக செயல் திட்டத்தின் கீழ் குருமாம்பேட் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் மண்ணாடிப்பட்டில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்த வயல்வெளி பள்ளி பயிற்சி வகுப்புகள் நடந்தது. தோட்டக்கலை வல்லுனர் ஜாகீர் உசேன் வரவேற்றார். பயிற்சி வகுப்புகளில் மண்ணாடிப்பட்டு, சோம்பட்டு, திருக்கனூர் பகுதிகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இவர்கள் 5 அணிகளாக பிரிக்கப்பட்டு காய்கறி பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் குறித்துஆய்வு செய்தும் அவற்றைத் தடுக்கும் முறைகள் குறித்தும் பயிற்சி பெற்றனர். பயிர் பாதுகாப்பு வல்லுநர் ராகவன், மணிமேகலை, திவ்யா ஆகியோர் விவசாயிகளின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தனர். திருக்கனூர் வேளாண் அலுவலர் தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார்.

**சூரைமீன் பிடிப்பது குறித்து பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,01:58 IST

கடலூர் : கடலூர் முதுநகர் மீன் வள பயிற்சி நிலையத்தில், நவீன முறையில் சூரை மீன் பிடிப்பது குறித்த பயிற்சி வகுப்பு துவங்கியது. மீன்வள உதவி இயக்குனர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். தொழில்நுட்ப பயிற்சி மேலாளர் வேல்முருகன் வரவேற்றார். சிறப்பு விருந்தினர் நலவாரிய உறுப்பினர் சத்தியமூர்த்தி பேசினார். கைகளால் இயக்கக்கூடிய சூரை மீன் பிடி இயந்திரத்தை இயக்குவது எப்படி, அம்மீனை பதப்படுத்தி பயன்படுத்துவது எப்படி என்பது குறித்து மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஐந்து நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சியில் முதல் மூன்று நாட்கள் வகுப்பு பயிற்சியும், எஞ்சிய இரண்டு நாட்கள் ஆழ்கடல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**மூங்கில் மரம் வளர்ப்பால் ஆக்ஸிஜன் அதிகம் கிடைக்கும்**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,01:33 IST

ஓசூர்: ""மூங்கில் மரம் வளர்ப்பதின் மூலம் மனிதனுக்கு தேவையான அதிகளவு ஆக்ஸிஜன் கிடைக்கிறது,'' என ஓசூரை சேர்ந்த வேளாண் விஞ்ஞானி பாரதி தெரிவித்தார்.ஓசூர் தளி சாலை சிஷ்யா மேல்நிலைப்பள்ளியில் தேசிய அறிவியல் தின விழா நடந்தது. பள்ளி முதல்வர் வசந்தி தியாகராஜன் தலைமை வகித்தார். விழாவையொட்டி 2010-11 கல்வி ஆண்டுக்கான அறிவியல் கண்காட்சி நடந்தது.ஓசூர் குரோமர் பயோடெக் நிறுவனர் வேளாண் விஞ்ஞானி பாரதி கண்காட்சியை துவக்கி வைத்து கண்காட்சி மலரை வெளியிட்டார். டைட்டன் பள்ளி முதல்வர் சஜிதா முன்னிலை வகித்தார். பள்ளி வளாகத்தில் அறிவியல் தினத்தையொட்டி அமைக்கப்பட்ட சுற்றுசூழல் ஆர்வலர் "ஜிம்கார்பெட்' இயற்கை வள மேம்பாட்டு பூங்கா திறக்கப்பட்டது.கண்காட்சியில் மாணவ, மாணவிகள் கண்டுபிடித்த புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. நாசிக் நகரில் நடந்த தேசிய அறிவியல் கண்காட்சியில் இடம் பெற்ற காற்றால் வாகனம் இயக்கம் முறை, வேளாண் தொழிற்சாலை, பட்டு உற்பத்தி ஆகியவை குறித்து மாணவர்கள் தயாரித்து வைத்த அறிவியல் கண்டுபிடிப்புகள் பார்வையாளர்களை கவர்ந்தது. சுற்றுசுழல் பாதுகாப்பு குறித்து மாணவர் கலைநிகழ்ச்சி நடந்தது. வேளாண் விஞ்ஞானி பாரதி பேசியதாவது:உலகில் இந்தியாவில் தான் மூங்கில் மரம் வளருவதற்குரிய சீதோஷண நிலை, மண்வளம் காணப்படுகிறது. குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூங்கில் நன்றாக வளர்வதற்கான சாதக அம்சங்கள் காணப்படுகிறது. இதைபயன்படுத்தி அதிகமாக மூங்கில் வளர்க்க வேண்டும்.மூங்கில் மரங்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு பயன்பாட்டுக்கு பயன்படுகிறது. மூங்கில் மரங்கள் கார்பன்டைடு ஆக்ஸைடை அதிகபடியாக உள்ளித்து கொண்டு, பெருமளவு மனித சுவாசத்துக்கு தேவையான ஆக்ஸிஜனை வெளியிடுகிறது. இதனால், மனிதன் மூளைக்கு தேவையான பெருமளவு ஆக்ஸிஜன் மூங்கில் வளர்ப்பால் கிடைக்கிறது.மூங்கில் மரத்தின் சிறப்பை அறிந்து ஒவ்வொரு வீட்டின் முன்பும், அலுவலகங்கள், நிறுவனத்தின் வளாக பகுதியிலும் மூங்கில் மரம் வளர்க்க வேண்டும்.இவ்வாறு அவர் சேபினார்.* மத்திகிரி டைட்டான் டவுன்ஷிப் பள்ளியிலும் தேசிய அறிவியல் தினம் நடந்தது. இதையொட்டி வினாடி - வினா நிகழ்ச்சி நடந்தது. பள்ளி முதல்வர் சஜிதா தலைமை வகித்தார். பெங்களூரு மற்றும் ஓசூர் பகுதியை சேர்ந்த ஒன்பது சி.பி.எஸ்.இ., பள்ளிகள் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். முதல் பரிசை டைட்டன் பள்ளி மாணவர்கள் பெற்றனர். இரண்டாது பரிசை டி.வி.எஸ்., பள்ளியும், மூன்றாவது பரிசை அசோக்லேலேண்ட் பள்ளியும் பெற்றன.வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டைட்டான் நிறுவன வாட்ச் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. டைட்டான் நிறுவன மூத்த அதிகாரி கைலாசநாதன் மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களுக்கு புத்தகம் மற்றும் சான்றிழ்கள் வழங்கப்பட்டது. போட்டி ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் அன்பு, தீபா மற்றும் ஸ்ரீபிரதா ஆகியோர் செய்திருந்தனர்.

**தீவன விலையை கட்டுப்படுத்த கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,01:34 IST

கிருஷ்ணகிரி: "கால்நடை தீவனங்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த, தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தமிழக விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் ராமகவுண்டர் தெரிவித்துள்ளார். அவர், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளது: பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று தமிழக அரசு பால் விலையை உயர்த்தியுள்ளது. இதற்காக தமிழக அரசுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்க பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய குழு அமைப்பதாக தமிழக அரசு தெரிவித்தது. ஆனால், இது வரை குழு அமைக்கப் படவில்லை. உடனடியாக குழு அமைத்து தொடக்க சங்க பணியாளர்களை பணி நிரந்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
பால் விலையை உயர்த்திய போதும், கால்நடை தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, கால்நடை தீவன தொழிற்சாலை உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, கால்நடை தீவனங்களின் விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். கிருஷ்ணகிரி ஆவின் கூட்டுறவு ஒன்றியம் நிர்வாக சீர்கேடு காரணங்களால் 53 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கி வருகிறது. நிர்வாக நடவடிக்கையை சீர் படுத்தி, நஷ்டத்தை ஈடுகட்டி, லாபத்தில் இயங்கும் நிலையை கொண்டு வர மாவட்ட நிர்வாகம் முயற்சி மேற்கொள்ள வேண்டும். மேலும், பால் பண பட்டுவாடா 16 கோடி ரூபாயை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க ஆவண செய்ய வேண்டும்.

**தேயிலை விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 03,2011,00:15 IST

கோத்தகிரி : கோத்தகிரி பில்லிக்கம்பை கிராம தேயிலை விவசாயிகளுக்கு இலைப்பறிக்கும் முறை குறித்த செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.இதில், குன்னூர் உபாசி கே.வி.கே., விஞ்ஞானிகள் ராமமூர்த்தி மற்றும் சிவக்குமார் ஆகியோர், இயந்திரம் மூலம் தேயிலை பறிக்கும் முறை, உரிய காலத்தில் கவாத்து செய்தல், தரமான பசுந்தேயிலை பறிப்பதால் விவசாயிகளுக்கு கிடைக்கும் லாபம், சங்கங்களுக்கு வாரியம் வழங்கும் மானியம் ஆகியவை குறித்து விளக்கம் அளித்தனர். தொடர்ந்து, தேயிலை தோட்டத்தில் இயந்திரம் மூலம் இலைப்பறிக்கும் முறை குறித்து நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில், கிராம கோயில் பூசாரி நேரு வரவேற்றார். ஊர் தலைவர் சுப்பிரமணி தலைமை வகித்தார். ஸ்ரீ பாரதமாதா விவசாயிகள் சங்க தலைவர் சண்முகம், செயலாளர் பாலமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

**தீவனப்பயிர்கள் வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,21:57 IST

தேனி : காமாட்சிபுரம் சென்டெக்ட் விவசாய அறிவியல் மையத்தின் சார்பில் தீவனப்பயிர் விதைகள் வழங்கும் விழா நடந்தது. சென்டெக்ட் ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். பண்ணை மேலாளர் ராஜா வரவேற்றார். கடமலைக்குண்டு, சீப்பாலக்கோட்டை, காமாட்சிபுரம் கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு தீவனப்பயிர் விதைகள் வழங்கப்பட்டன. திட்ட உதவியாளர் சுருளி ஆண்டவர் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் நுண்ணுரம், பயறு வகைகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,21:53 IST

வருஷநாடு : கடமலைக்குண்டு வேளாண்மை துறையில், விவசாயிகளுக்கு பயிறு வகைகள் மானியத்துடன் வழங்கப்படுவதாக உதவி இயக்குனர் சங்கரன் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது: கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, வருஷநாடு, கோம்பைத்தொழு, சிங்கராஜபுரம், கண்டமனூர், ராஜேந்திரநகர், பாலூத்து, குமணந்தொழு, வாலிப்பாறை, தும்மக்குண்டு, சிங்கராஜபுரம், முருக்கோடை, மூலக்கடை, முத்தலாம்பாறை உட்பட பல கிராமங்களில் தோட்டம் மற்றும் மானவாரி விவசாயம் அதிகமாக உள்ளது. வேளாண்மை துறை மூலமாக தட்டான்பயிர் 12%, பாசிபயிர் 30%, நுண்ணுயிர் உரமும் மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை துறை அலுவலகத்தினை தொடர்பு கொண்டுபயன்பெறலாம், என்றார்.

**சந்தையில் குவியும் தக்காளி : கிலோ 10 ரூபாய் தான்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,21:37 IST

சிவகங்கை : வரத்து அதிகரித்துள்ளதால் தக்காளி விலை, எப்போதும் இல்லாத அளவில் குறைந்துள்ளது. சிவகங்கை வாரச்சந்தையில், கிலோ 10 ரூபாய்க்கு விற்றது.

சந்தையில் விலை நிலவரம் (கிலோ): வெண்டிக்காய் -20; பாகற்காய்-20; கடந்த வாரம் 40க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 30; கேரட்-30; முள்ளங்கி-15; கத்தரிக்காய்-20; 15 க்கு விற்ற உருளை கிழங்கு-12; 15 க்கு விற்ற முட்டை கோஸ்-10; 10 க்கு விற்ற தக்காளி -7; கருணை கிழங்கு- 30; இஞ்சி-30, அதில் இரண்டாவது ரகம் -25; அவரைக்காய்-20; பட்டர் பீன்ஸ்-80.

40 க்கு விற்ற வெங்காயம்-35; பெல்லாரி- 20; காலிபிளவர்- 20; சேணை கிழங்கு- 30; சேம்பு- 30; 15 க்கு விற்ற பச்சை மிளகாய்- 10; 24க்கு விற்ற பீட்ரூட்-20; 26க்கு விற்ற நூக்கல் -30; சோயாபீன்ஸ் -60; எலுமிச்சை-25; 30 க்கு விற்ற பீர்க்கை -24; டர்னிப்- 30; சீனி அவரை-10; சவ்சவ் -15; மல்லித்தழை-20; பூசணி- 20 ரூபாய்.

பழங்கள்: 130 க்கு விற்ற மாதுளை- 150, அதில் இரண்டாவது ரகம் -120; ஆப்பிள்- 120, இரண்டாவது ரகம் -90; ஆந்திர ஆரஞ்சு- 60; கொடைக்கானல் ஆரஞ்சு -40; 40க்கு விற்ற சாத்துக்குடி-50; திராட்சை (வெள்ளை) -80; மஸ்கட் (கறுப்பு) -100; கறுப்பு (பன்னீர் திராட்சை) -40; அன்னாசி பழம்-30; சப்போட்டா -20; கொய்யா -30 ரூபாய். ஆப்பிள், மாதுளை வரத்து குறைந்ததால் விலை அதிகரிப்பதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ***நடப்பு ஆண்டில், முன்னணி நாடுகளில் இயற்கை ரப்பர் உற்பத்தி 4.8 சதவீதம் அதிகரிக்கும்***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு 2011 காலண்டர் ஆண்டில், உலகில் இயற்கை ரப்பர் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் உற்பத்தி 4.8 சதவீதம் அதிகரிக்கும் என இத்துறையைச் சேர்ந்த அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.*

*பத்து நாடுகள்*

*கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, பாப்புவா நியூ கினியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகள் இயற்கை ரப்பர் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன. சர்வதேச ரப்பர் உற்பத்தியில் இந்த நாடுகளின் பங்களிப்பு 92 சதவீதமாக உள்ளது. கடந்த 2008–ஆம் ஆண்டில் 94 சதவீதமாக இருந்தது.*

*நடப்பு ஆண்டில் முன்னணி நாடுகளின் ரப்பர் உற்பத்தி ஒரு கோடி டன்னாக இருக்கும் என முன்பு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போதைய மதிப்பீட்டில் இது*

*சுமார் 98 லட்சம் டன்னாக குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இயற்கை ரப்பர் உற்பத்தி வளர்ச்சி குறித்த மதிப்பீடு முந்தைய 8 சதவீதம் என்ற அளவிலிருந்து 4.8 சதவீதமாக குறைந்து போயுள்ளது.*

*சர்வதேச சந்தையில் இயற்கை ரப்பர் விலை உயர்ந்து வருகிறது. இதனால் முக்கிய நாடுகளில் ரப்பர் பால் எடுக்கும் பணிகள் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன. இதனையடுத்து, ஜனவரி–மார்ச் மாத காலத்தில் இந்த நாடுகளின் ரப்பர் அளிப்பு 6 சதவீதம் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில் சீனா, இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் இயற்கை ரப்பருக்கான தேவை மிகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*டயர் தயாரிப்பு*

*டயர் தயாரிப்பு துறையில் இயற்கை ரப்பர் முக்கிய மூலப்பொருளாக உள்ளது. சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் மோட்டார் வாகனங்கள் விற்பனை வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்து வருகிறது. எனவே டயர்கள் விற்பனையும் சூடுபிடித்துள்ளது. டயர் நிறுவனங்களில் ரப்பருக்கான தேவை அதிகரித்து வருவதால், இந்த நாடுகள் இயற்கை ரப்பரை அதிக அளவில் இறக்குமதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## பூத்தது ஒயிட் டைசி மலர்கள்



ஊட்டி மரவியல் பூங்காவில் வருகிற கோடை சீசனை முன்னிட்டு மலர்செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இதில் தற்போது ஒயிட் டைசி எனப்படும் வெள்ளை நிற மலர்கள் பூத்து குலுங்குகிறது.



# வேளாண்மை செய்திகள்

## நடவுக்கு விதைகள் வாங்கும் போது கவனிக்க வேண்டியவை என்ன?

### விவசாயிகளுக்கு அதிகாரி விளக்கம்

விவசாயத்தின் முக்கிய அம்சம் நல்ல மகசூலை பெறுவதுதான். அவ்வாறு நல்ல மகசூல் பெற வேண்டும் என்றால் பயன்படுத்தப்படும் இடுபொருட்கள் தரமுள்ளதாக இருக்க வேண்டும். இடுபொருட்களில் விதை முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயிகள் நடவுக்கு தேர்ந்தெடுக்கும் விதைகள் தரமற்றதாக இருந்தால் பயிர் மகசூல் கடுமையாக பாதிக்கும்.

**பாரம்பரிய விதைகள்**

எனவே நடவுக்கு பாரம்பரிய சுத்தம் கொண்ட விதைகளை பயன்படுத்துவது சிறந்தது. இவை முளைப்புத்திறன், புறத் தூய்மை, அளவான ஈரப்பதம், பிற ரகக்கலப்பு இல்லாமை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இல்லாமல் இருப்பது அவசியம். பாரம்பரிய சுத்தம் இல்லாத விதைகள் வயல்களில், பயிர்களின் உயரம் மாறுபட்டு 2 அல்லது 3 அடுக்குகளில் காணப்படும்.

3 அடுக்குகளில் உள்ள பயிர்கள் வெவ்வேறு காலக்கட்டத்தில் பூக்கும். அதாவது முதல் அடுக்கில் உள்ள பயிர் பூக்கும் போது 2-ம் மற்றும் 3-ம் அடுக்கு வளர்ச்சி பருவத்தில் இருக்கும். முதல் அடுக்கில் உள்ள பயிர்கள் முதிர்ந்து உதிர்ந்து விடும். இதனால் முதலில் முற்றிய பயிர்களை அறுவடை செய்ய இயலாது. ஒரே நேரத்தில் அறுவடை செய்வதும் சிரமம்.

**விதை பரிசோதனை**

மிகுந்த சிரமங்களுக்கு இடையில் அறுவடை செய்தாலும், விதைகளின் நிறம் மற்றும் தன்மை மாறுபடுவதால் விற்பனை செய்யும் போது மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்ய நேரிடும். மீண்டும் விதைப்புக்கு இந்த விதைகளை பயன்படுத்தவும் முடியாது. இதனால் விவசாயிகள் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்கும் சூழ்நிலை உருவாகும்.

இனத்தூய்மை பராமரிக்கப்பட்ட விதைகள், விதைச்சான்று அலுவலர்களால் வயல்களில் ஆய்வு செய்யப்பட்டு வயல் தரம் பாதுகாக்கப்படுகிறது. இனத்தூய்மை பரிசோதனைக்கு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, பயிர் வல்லுனர்களால் பரிசோதனை செய்யப்பட்டு இனத்தூய்மை இருந்தால் மட்டுமே சான்று வழங்கப் படும்.



**இனத்தூய்மை சதவீதங்கள்**

கடைகளில் விற்பனை செய்யப்படும் விதைகளில் இருந்தும் மாதிரிகள் எடுக்கப்பட்டு விதை ஆய்வாளர்களால் பரிசோதனை செய்யப்படும். மத்திய அரசால் பயிர் ரகங்களுக்கு 98 சதவீதமும், காம்போசிட், சிந்தடிக்ஸ் மல்டிலைன்ஸ் மற்றும் வீரிய ரகங்களுக்கு 95 சதவீதமும், ஆமணக்கு வீரிய ரகத்திற்கு 85 சதவீதமும் இனத் தூய்மை சதவீதங்கள் நிர்ணயிக்கப்பட்டு உள்ளன.

எனவே, விவசாயிகள் விதைகள் வாங்கும் போது சான்று அட்டையில் விதைகளின் இனத்தூய்மை சதவீதம் குறிப்பிடப்பட்டு உள்ளதா? என்று சரிபார்த்து விதைகளை வாங்க வேண்டும். மேலும், விவரங்கள் தேவைப்பட்டால் விதைச்சான்று இயக்குனர், 1424-ஏ, தடாகம் சாலை, ஜி.சி.டி. போஸ்ட், கோவை என்ற முகவரியிலும், 0422-2432984 தொலைப்பேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

-தகவல்: **கோபாலகிருஷ்ணன்**, விதைச்சான்று மற்றும் அங்கச்சான்று இயக்குனர், **கோவை.**

## பருவம் இல்லாத நாட்களிலும் மிளகாய் நாற்று உற்பத்தி

### விவசாயி சாதனை

பருவம் இல்லாத நாட்களிலும் வீரிய ஒட்டுரக மிளகாய் நாற்றுக்களை தேவம்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி சின்ன தங்கம் உற்பத்தி செய்து வருகிறார். இது குறித்து விவசாயி சின்னதங்கம் கூறியதாவது:-

**மேட்டுப்பாத்தி**

வீரிய ஒட்டுரக மிளகாய் நாற்றுக்களை பயிரிடுவதற்கு ஓரளவு நிழல் படும் படியான இடத்தை தேர்வு செய்தேன். இந்த இடம் 10 முதல் 15 சென்டிமீட்டர் உயரம் இருக்குமாறு நல்ல செம்மண்ணை கொட்டி இதன் அகலம் 1 மீட்டராகவும் நீளம் 3 மீட்டர் வரை இருக்குமாறு அமைத்துக் கொண்டேன். இந்த மேடையில் கொட்டப்பட்ட மண் மிருதுவாகவும், ஈரம் காக்கும் தன்மை உடையதாகவும் இருக்க குறுமண் மற்றும் மணலை கலந்தேன்.

இந்த மேட்டுபாத்தியின் மேற்பரப்பை மரப்பலகை கொண்டு சமன் படுத்தினேன். அதில் 10 சென்டி மீட்டர் இடைவெளியில் 1.2 சென்டிமீட்டர் ஆழத்துக்கு கோடுகள் போட்டு அந்தக் கோடுகளில் விதை நேர்த்தி செய்த விதைகளை பரவலாக சீரான இடைவெளியில் விதைத்தேன்.

**அழுகல் நோய்**

அடர்தியாக விதைப்பது அழுகல் நோய் தாக்குதல் மற்றும் நாற்றுக்கள் மெலிந்து காணப்படும் என்பதால் விதைக்கும் போதே விதை மட்டத்தை 3 முதல் 4 மடங்கு இருக்குமாறு அமைத்துக் கொண்டேன். விதைகளை மணல் அல்லது நாற்றாங்கால் மண்ணை கொண்டு மூடிவிட்டு பூவாளி மூலம் நீர் பாய்ச்சினேன். அதன் பின்னர் சூரிய ஒளி படாமல் இருக்க வைக்கோல் அல்லது காய்ந்த இலைகளை கொண்டு பாத்திகள் மேல் பரப்பினேன். 10 முதல் 15 நாள் கழித்து பாத்திகளின் மேல் பரப்பிய வைக்கோல் அல்லது இலைகளை அகற்றினேன். இதை தொடர்ந்து பூவாளி கொண்டு காலை மற்றும் மாலை நேரங்களில் நீர் ஊற்றுவது நாற்றுக்கள் நல்ல வளர்ச்சி அடைவதற்கும் விதைகள் நாற்றாங்காலை விட்டு வெளியே வராமல் இருப்பதற்கும் இது உதவியது.

நன்கு பண்படுத்திய ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு 20 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ் உரத்தை மண்ணுடன் கலந்தேன். மேலும் நாற்றுக்கள் நன்கு வளரும் விதத்தில் 2 கிலோ டி.ஏ.பி தொழு உரம் இட்டேன். இன் வாயிலாக நாற்றுக்கள் அதிக ஊட்ட சத்துடன் வளர்ந்து இருந்தது.

**மண் நேர்த்தி**

மிளகாய் நாற்றுக்கள் நன்கு வளர்ந்து இருந்த நிலையில் நூற்புழு மற்றும் இளம் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த 1 சென்ட் நிலத்துக்கு 250 கிராம் பியூரிட்டான் குருணைகளை வைத்தேன். மேலும் செடிகளை தாக்கி அழிக்கும் அழுகல் நோய் வராமல் இருக்க ஒரு சதவீதம் வீரியம் உள்ள போர்டா கலைவலயால் மண்ணை நேர்த்தி செய்தேன்

நாற்றாங்காலில் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த 15 நாட்கள் இடைவெளியில் காப்பர் ஆக்ஸி குளோரைடு அல்லது புளுகாப்பர் 2.5 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஊற்றினேன். நடவு செய்வதற்காக கேட்ட விவசாயிகளுக்கு நாற்றுக்களைபிடுங்குவதற்கு 12 மணி நேரம் முன்னர் மேட்டுப் பாத்திகள் நன்கு முழ்கும் அளவுக்கு நீர் பாய்ச்சினே.

**பருவம் இல்லாத காலங்களிலும்.....**

இதன் காரணமாக தண்ணீர் முழுவதும் மண்ணில் இறங்கி நாற்றுக்களை பிடுங்கும் போது வேர்கள் எந்த விதமான சேதமும் ஏற்படாமல் பிடுங்க முடிந்தது. இந்த முறையை பயன்படுத்தி பருவம் இல்லாத காலங்களிலும் மிளகாய் நாற்றுக்களை உற்பத்தி செய்ய முடிந்தது.

இவ்வாறு நாற்றுக்களை உற்பத்தி செய்வதால் வழக்கமான முறையை விட விதை அளவு 30 முதல் 40 சதவீதம் குறைவாக தேவைப்பட்டது. மேலும் பாதுகாப்பான சூழலில் நாற்றுக்கள் வளர்க்கப்படுவதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை கண்காணிப்பது எளிதாக இருந்தது.

இவ்வாறு விவசாயி சின்னதங்கம் கூறினார்.

## நிலத்தின் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க விவசாயிகளுக்கு மானியம்

விவசாயிகள் தங்களது நிலத்தின் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க மானியம் பெற்றுக்கொள்ளலாம் என்று வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார்.

சூலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கு.மோகன் ராஜ் சாமுவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:-

**மானியம்**

தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்து வரும் விவசாயிகள், தங்களிடம் இருக்கும் நீரை சிக்கனப்படுத்தவும், குறைந்தபட்ச நீரைக்கொண்டு சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும், மண் வாய்க்காலின் மூலம் நீர் செல்லும் போது ஏற்படும் இழப்புகளை தவிர்க்கவும் நுண்ணுயிர் பாசனம் மேற்கொள்ளவும் மானியம் வழங்கப்படுகிறது. வேளாண்மைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டங்களின் கீழ் இந்த மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் பயறுவகை பயிர்களை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு தேவையான அத்தியாவசியமான விதைகள், நுண்ணுயிர் உரங்கள், நுண்ணூட்டசத்துகள், விதை நேர்த்தி மருந்து, பயிர்பாதுகாப்பு மருந்துகள், களைகொல்லிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க ஆகும் மொத்த செலவில் ரூ.15 ஆயிரம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**நீர்செல்கலன்கள்**

பயறு வகை பயிர்களான துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டை விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகள் இதன் மூலம் பயன்பெறலாம். மேலும் எண்ணைவித்து பயிர்கள், பயறுவகைப்பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேர் பரப்பில் தெளிப்பு நீர் பாசனம் அமைத்தால் ரூ.7 ஆயிரத்து 500 மானியமாக வழங்கப்படுகிறது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் பயறு வகை பயிர்களை சாகுபடி மேற்கொள்ளும் இடத்துக்கு நீரை இழப்பு இல்லாமல் எடுத்து சென்று பயிர்களுக்கு வழங்க நீர் செல்கலன்கள் வழங்கப்படுகின்றன.

ஒரு ஹெக்டேர் பரப்புக்கு தேவைப்படும் 2 இஞ்ச், 2½ இஞ்ச், மற்றும் 3 இஞ்ச் விட்டமுள்ள பி.வி.சி.குழாய்களுக்கு மீட்டர் ஒன்றுக்கு ரூ.18.75 மானியம் வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு ஹெக்டேர் பரப்புக்கு தேவைப்படும் குழாய்களுக்கு ரூ.15 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

**ஆவணங்களுடன்**

எனவே இந்த திட்டங்களின் கீழ் மானியம் பெற விருப்பம் உள்ள விவசாயிகள் அரசு மூலம் அனுமதி பெற்ற நிறுவனங்களை தேர்வு செய்து விண்ணப்பத்துடன் கிராம நிர்வாக அலுவலரின் பயிர் சாகுபடி சான்று, சிட்டா, நிலவரைபடம், மற்றும் 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் வேளாண்மை விரிவாக்க மையத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு அதில் வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,880–2,920

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,250–3,350

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,350–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை (சாக்கு வரிஉள்பட) 1,425–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட டின்(வரிஉள்பட) 1,764–00

**நல்லெண்ணெய்**

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500–00
டின் (15கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 12,500.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,700–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ டின் (வரிஉள்பட) 1,185.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,285.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,120.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 595–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மார்ச்.2–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| பல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு(வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,900 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மார்ச்.2–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 12,373
2. ஜெயதார் 22 எம்.எ ரூ. ——
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 16,207
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 15,803
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 16,450
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 16,169
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,777

## எண்ணை மார்க்கெட்

கோவை,மார்ச்.2–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 84.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1200 | 75.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 110.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1530 | 120.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,730 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,030 | 61.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| வில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | – |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.400.00 | ரூ. 600.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 2.00 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.12.00 | ரூ.18.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.4.00 | ரூ.7.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.3.00 | ரூ.4.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| மேரக்காய் | ரூ.5.00 | ரூ.8.00 |

## கோவை உழவர் சந்தை

கோவை,மார்ச்.2–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 40–00 |
| கத்தரிக்காய் | ரூ. | 12–18 |
| வெண்டைக்காய் | ரூ. | 8–12 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 4–6 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6–6.50 |
| புடலை | ரூ. | 8–10 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18–20 |
| சுரைக்காய் | ரூ. | 10–12 |
| பாகற்காய் | ரூ. | 8–12 |
| கொத்தவரை | ரூ. | 16–00 |
| பூசணிக்காய் | ரூ. | 22–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 10–11 |
| மேரக்காய் | ரூ. | 15–16 |
| பச்சை மிளகாய் | ரூ. | 10–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 14–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 24–25 |
| பெரியவெங்காயம் | ரூ. | 13–00 |
| இஞ்சி | ரூ. | 32–55 |
| முருங்கைக்காய் | ரூ. | 40–44 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16–18 |
| சேனைகிழங்கு | ரூ. | 20–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 32–00 |
| முள்ளங்கி | ரூ. | 6–8 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24–26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8–12 |
| நூல்கோல் | ரூ. | 16–00 |
| கொத்தமல்லி | ரூ. | 12–16 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 |

| | | |
|---|---|---|
| கலர்கோஸ் | ரூ. | 26–00 |
| புதினா | ரூ. | 16–00 |
| காலிப்பிளவர் | ரூ. | 8–10 |
| பொறியல் தட்டை | ரூ. | 16–00 |
| பச்சை மொச்சை | ரூ. | 32–00 |
| தேங்காய் | ரூ. | 10–15 |
| பட்டாணி | ரூ. | 30–35 |
| பூண்டு | ரூ. | 120–180 |
| கறிவேப்பிலை | ரூ. | 40–00 |
| அகத்தி | ரூ. | 12–00 |
| வாழைக்காய் | ரூ. | 14–00 |
| திராட்சை | ரூ. | 26–00 |
| திராட்சை (பச்சை) | ரூ. | 56–00 |
| குடைமிளகாய் | ரூ. | 30–32 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 14–00 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 28–00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 14–00 |
| புஸ்பீன்ஸ் | ரூ. | 18–21 |
| மாங்காய் | ரூ. | 35–90 |
| காளான் | ரூ. | 80–140 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 10–13 |
| சப்போட்டா1கிலோ | ரூ. | 16–17 |
| கொய்யா1கிலோ | ரூ. | 22–00 |
| மாதுளை1கிலோ | ரூ. | 170–00 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 16–17 |
| வரமிளகாய் | ரூ. | 90–00 |
| ஆப்பிள் | ரூ. | 90–110 |
| சாத்துக்குடி | ரூ. | 28–00 |
| நெல்லிக்காய் | ரூ. | 20–30 |
| ஆரஞ்சு | ரூ. | 38–00 |
| வெள்ளரி | ரூ. | 26–00 |
| புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–00 |
| அவரை | ரூ. | 8–12 |
| அவரை (ஊட்டி) | ரூ. | 60–00 |
| நிலக்கடலை | ரூ. | 36–00 |
| மக்காச்சோளம் | ரூ. | 3.50 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21200 |
| மிளகு (சேட்டன்) | ரூ.21600 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7100 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 7500 |
| சுக்கு(புதியது) | ரூ.16000 |
| சுக்கு(பழையது) | ரூ.17,000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9000 |
| கொப்பரை நாடன் | ரூ.6000 |
| கொப்பரை ராசு | ரூ.5875 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6150 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.6600 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23600 |
| ரப்பர் பால் | ரூ. 17550 |
| காப்பி | ரூ. 9350 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5200 |
| நேந்திரகாய் | ரூ. 1200 |
| இஞ்சி | ரூ. 1450 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,680.00 | 15,760.00 | 15760.00 |
| ஒரு கிராம் | 1,960.00 | 1,970.00 | 1,970.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 52,420.00 | 54,000.00 | 54,000.00 |
| ஒரு கிராம் | 56.10 | 54.00 | 54.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**மஞ்சள் (கோவை)**

தனிவிராலி ரூ.11700–12853
தனிகிழங்கு ரூ.10500–11003

**தேங்காய்**

திருப்பூர் ரூ.800–1000

நெகமம் ரூ.500–1000
செஞ்சேரி ரூ.500–550

**தேங்காய்பருப்பு**

செஞ்சேரி ரூ.5000–6000

**மக்காச்சோளம்**

தொண்டாமுத்தூர் ரூ.900–1000

## பட்டுக்கூடு

**மஞ்சள் கலப்பினம்**

அதிகபட்சவிலை ரூ.155.00
சராசரி விலை ரூ.144.49
குறைந்தபட்சவிலை ரூ.137.00

**வெள்ளை கலப்பினம்**

அதிகபட்சவிலை ரூ.290.00
சராசரி விலை ரூ.271.52
குறைந்தபட்சவிலை ரூ.256.00

**பட்டு நூல் ரூ.2,225**